சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

**OS 174/2019**

08.08.2025

**வா.சா.1. ரவிச்சந்திரன் த/பெ. சிவமணி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 4 மற்றும் 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .**

இந்த வழக்கினை யார் தாக்கல் செய்தது என்றால் - என் தகப்பனார் உயிருடன் இருந்தபோது தாக்கல் செய்தார். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் - 2020 ல் இந்த வழக்கு தாக்கல் செய்தபின்னர் இறந்துபோனார். இறந்துபோன என் தகப்பனாருக்கு எத்தனை நபர்கள் வாரிசக்ள என்றால் - 8 பேர். பாலகிருஷ்ணனன், ராஜேந்திரன், செங்கொடி, இலரா, ரவிச்சந்திரன் ஆகிய நான், ஸ்டாலின், கீதா, சித்ரா ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம். என் தகப்பனார் இறந்தபின்னர், இந்த வழக்கில் வாரிசுகள் சேர்க்க வேண்டி நான்தான் மனு கொடுத்தேன் என்றால் - சரிதான். என் தகப்பனாரின் என்னை தவிர மற்ற 7 நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் - இல்லை. ஏன் மற்ற 7 நபர்களையும் சேர்க்கவில்லை என்றால் - அவர்கள் இந்த வழக்கின் பாகங்களை எனக்கு விட்டுக்கொடுத்துவிட்டார்கள். அதனால் சேர்க்கவில்லை. இந்த வழக்கில், என்னுடைய உடன்பிறந்தவர்கள் அவர்களுக்குரிய பாகத்தை எனக்கு விட்டுக்கொடுத்தது தொடர்பாகவும் நான்தான் என் தகப்பனாருக்கு இந்த வழக்கில் வாரிசு என்றும் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லவில்லை. இந்த வழக்கில் உள்ள 9 பிரதிவாதிகள் யார் யார் என்றால் - என் தகப்பனாரின் உடன்பிறந்த அண்ணன் மற்றும் தம்பி வாரிசுகள் ஆவார்கள். ஏன் அவர்களை வாரிசுகளாக சேர்த்துள்ளேன் என்றால் - ஒரே இடத்தில் வசிக்கிறோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது நாங்கள் வசிக்கும் இடம் ஆகும். அது 3 வாசல் வைத்த பழைமையான ஓட்டு வீடு என்றால் - சரிதான். அதன் கதவு எண் 458, 459, 460 ஆகும். **அந்த புகைப்படம் மற்றும் ரசீது (எண்ணம் 2) பி.வா.சா.ஆ. ஆகும்**. யார் எந்தெந்த வீட்டில் குடியிருக்கிறோம் என்றால் - 1, 2 பிரதிவாதிகள் க.எண். 458 வீட்டிலும் 459 ல் வாதியாகிய நான் வசிக்கிறேன். 460 ல் 7 ம் பிரதிவாதி ராமலிங்கம் வசிக்கிறார். இந்த வீட்டின் அளவு கொல்லையையும் சேர்த்து எவ்வளவு அளவு என்றால் - 27.1/2 செண்ட் அல்லது 82 குழி உள்ளது. வீட்டை சுற்றி நான்கு புறமும் காம்பவுண்ட் உள்ளதா என்றால் - காம்பவுண்டை மறைத்துவிட்டார்கள். 3 வீடுகளுக்கும் தெற்கு பார்த்த வாசல் உள்ளது. ரோடும் தெற்கு புறமும் தான் உள்ளது. ரோட்டிற்கும் எங்கள் வீட்டின் மனைக்கும் இடையில் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் - ரோட்டிலிருந்து இறங்கினால் வீடு உள்ளது. வடக்கு புறம் என்ன உள்ளது என்றால் - 3 வீடுகளுக்கும் தனித்தனியாக கழிப்பறைகள் உள்ளது. பின்புறம் சுற்றுச்சுவர் உள்ளதா என்றால் - 7 ம் பிரதிவாதி கம்பி வேலி வைத்துள்ளார். மற்றப்பகுதி சும்மாதான் உள்ளது. தாவா வீடானது எவ்வளவு மதிப்பு பெறும் என்றால் - 3 முதல் 4 இலட்சம் மதிப்பு பெறும். வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கறிஞரிடம் யார் விவரங்களை சொன்னார்கள் என்றால் - என் அப்பா சொன்னார். நான் அவருடன் வழக்கறிஞரின் அலுவலகம் சென்றேனா என்றால் - இல்லை. தற்போது வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் - வழக்கறிஞர் சொல்லி கேட்டுக்கொண்டேன். இந்த வழக்கில் தாவா இடத்தில் வீடு உள்ளதாக வழக்குரையில்

சொல்லவில்லை என்றால் - சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் மொத்தம் 27.1/2 செண்ட் என்று சொல்லியுள்ளேன். சர்வே எண். 2 ல் 12.1/2 செண்ட் என்றும் சர்வே எண். 3 ஏ, 3 பில் 9 செண்ட் என்று சொல்லியுள்ளேன். வழக்கு சொத்தில் 3 வீடுகள் உள்ளதையும் அவற்றில் 3 குடித்தனங்கள் உள்ளதையும் சொல்லவில்லை என்றால் - சரியல்ல சொல்லியுள்ளேன். பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்து அதில் 3 வீடுகளையும் மறைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதை சொன்னதால் பின்னிட்டு திருத்தம் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் - எனது அப்பாவின் அம்மா செங்கம்மாளுக்கு உரியது. அவரிடமிருந்து கிடைத்தது. எனது பாட்டி செங்கம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் - 3 வாரிசுகள். அவர்கள் கோவிந்தராஜ், சிவமணி, காசிநாதன் ஆகியோர்கள். என் பாட்டி செங்கம்மாள் எப்போது இறந்துபோனார் என்றால் - 1981 ம் ஆண்டு. என் தாத்தா மாரியப்பா தேவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் தாத்தா, பாட்டி இறக்கும்போது தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இருந்ததா என்றால் - இருந்தது. எவ்வளவு நிலங்கள் இருந்தது என்றால் - தெரியாது. என் தாத்தா, பாட்டி உயிருடன் இருந்தபோது சொத்துக்களை பொறுத்து ஏதேனும் உயில், பாகப்பிரிவினை, செட்டில்மெண்ட் ஆகிய ஏதேனும் எழுதி வைத்தார்களா என்றால். - தாத்தா என்ன செய்தார் என்று தெரியாது. என் பாட்டி எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை. என் பாட்டி 1981 ம் ஆண்டு இறந்தபிறகு அவர்களது வாரிசுகளான கோவிந்தராஜ், சிவமணி, காசிநாதன் ஆகியோர்கள் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்களா என்றால் – இல்லை. கோவிந்தராஜ், சிவமணி, காசிநாதன் ஆகியோர்களுக்கு மொத்தம் 17 வாரிசுகள் என்றால் - சரிதான். இநத 17 வாரிசுகளும் செங்கம்மாள் சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதேனும் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் - இல்லை. செங்கம்மாள் சொத்துக்களை பொறுத்தவரையில் என் தகப்பனாரும் இந்த பிரதிவாதிகளும் என் உடன் பிறந்தவர்களும் சகபாகஸ்தர்கள் என்றால் - சரிதான். வழக்குரையில் செங்கம்மாள் விட்டுச் சென்ற சொத்துக்களில் மேற்சொன்ன பாகஸ்தர்கள் அனைவருக்கும் பங்கு இருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன். என் பாட்டி விட்டுச்சென்ற நஞ்சை நிலங்கள் தற்போது யார் வசம் உள்ளது என்றால் - என் பாட்டிக்கு நஞ்சை, புஞ்சை நிலங்கள் எதுவும் கிடையாது. வழக்கு சொத்து 82 குழி மட்டும் தான் உண்டு. அந்த 82 குழி சொத்தும் 17 வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் - சரிதான். என் உடன் பிறந்தவர்கள் அவர்களுக்கு உரிய பாகத்தை என் பெயருக்கு பத்திரம் எதுவும் பதிவு செய்துக்கொடுத்தார்களா என்றால் - இல்லை.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்குகிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.11 16:52:10 +0530

**சார்பு நீதிபதி,**

**மன்னார்குடி.**